**தலைப்பு 327 - காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூலை 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 19 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றன எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன எனவும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களைக் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) 1994 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1,950,000 தொகையான ஒரு வேன் 2020 திசெம்பர் 31 இல் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டுப் பெறுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு தாமதித்தமையின் காரணமாக 2020 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யப்படாததுடன் 2021 ஆம் ஆண்டின் போது கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) விற்றுத் தீர்ப்பதற்கு இருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 2,780,000 தொகையான 04 வாகனங்கள் 2020 சனவரி 31 ஆந் திகதி நீர்ப்பாசனத் திணைக்களத்தின் வேண்டுதலின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் நிதியற்ற சொத்துக்களிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | விற்றுத் தீர்ப்பதற்கு விடுவிக்கப் பட்டிருந்த வாகனங்களின் பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும். |
| (இ) 2020 திசெம்பர் 31 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 321,231 தொகையான கணனி உபகரணங்களின் பெறுமதிகளிலிருந்து ரூபா 108,000 மாத்திரம் கொள்வனவு செய்தலாக கணக்குகளில் காட்டி மிகுதி ரூபா 213,231 பெறுமதியானது பிழையாக ஆரம்ப மீதியுடன் சேர்த்துக் காட்டப்பட்டிருந்தது. | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொள்வனவு செய்யப்பட்ட கணனி துணைக் கருவிகளின் பெறுமதியாகிய ரூபா 321,231 தொகையிலிருந்து ரூபா 213,231 தொகையை பொருள் இருப்பு பதிவேட்டில் பதிவு செய்யும் போது ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப தவறுகளின் அடிப்படையில் ரூபா 28,367 ஆக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அதனை சரி செய்வதற்காக ரூபா 28,367 தொகையினை நீக்கி மீண்டும் உரிய ஆண்டின் போதே ரூபா 213,231 தொகையினை ஆரம்ப மீதியாக சொத்துக்கள் கணக்கிற்கு சரியாக கொண்டு வரப்பட்டுள்ளது. | ஆண்டின் போது கொள்வனவு செய்தல்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) 7 மீண்டுவரும் செலவு விடயங்களுக்குரிய ரூபா 2,529,015 கூட்டுமொத்த தொகையும் 5 மூலதன | காணப்பட்ட கொரோனா இன்னல் நிலைமையின் காரணமாக பல செலவு விடயங்களின் நிதி | நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டினை சிக்கனமாக உரிய |

| | | | |
|---|---|---|---|
| | செலவு விடயங்களுக்குரிய ரூபா 3,540,009 மொத்த தொகையும் சேமிக்கப்பட்டதுடன் அச்சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டில் 15 சதவீதத்திற்கும் 68 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | ஏற்பாட்டில் சேமிப்பினைக் காணக்கூடியதாக இருந்தது. | செயற்பாட்டிற்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இரண்டு செலவு விடயங்களுக்கான ரூபா 1,800,000 மொத்த தொகையான நிதி ஏற்பாடு நி.பி 66 இன் கீழ் ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தும் அவற்றில் ரூபா 1,045,337 அல்லது 58 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | நி.பி 66 இன் கீழான மாற்றல்களிலிருந்து சேமிப்புக்கள் காணக்கூடியதாக இருந்தும் 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொரோனா இன்னல் நிலைமையின் காரணமாக அலுவலகத்தை முறையாக செயற்படுத்த முடியாமை இதற்கு தாக்கமளித்துள்ளது. | ஏனைய செலவு விடயங்களிலிருந்து மாற்றப்பட்ட நிதி ஏற்பாட்டினை உரிய குறிக்கோள் களை நிறைவேற்று வதற்காக முழுமையாக ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (இ) | ஒரு செலவு விடயத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடான ரூபா 2,650,000 தொகையிலிருந்து 2020 நவம்பர் 30 ஆந் திகதியில் சேமிப்புரூபா 418,720 ஆக இருந்தது. அவ்வாறு இருக்கையில் அவசரத் தேவையின் அடிப்படையில் என காரணத்தைக் குறிப்பிட்டு ஏனைய செலவு விடயங்களிலிருந்து ரூபா 1,500,000 தொகை மாற்றம் செய்யப்பட்டிருந்த போதிலும் இதில் ரூபா 336,663 மாத்திரம் செலவு செய்யப்பட்டு ரூபா 1,582,057 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

## 2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கிய நிதிஏற்பாட்டினைப் பயன்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| கலா ஓயா ஆற்றுப் பள்ளத்தாக்கு காணிகளைப் பயன்படுத்தும் திட்டம் மற்றும் மத்திய மலைநாட்டின் 32 சிறிய நீர் ஊட்டச்சத்துப் பிரதேசங்களின் காணிகளைப் பயன்படுத்தும் திட்டத்தினைத் தயாரிப்பதற்காக சுற்றாடல் அமைச்சின் மூலம் ரூபா 871,091 வழங்கப்பட்டிருந்ததுடன் மிகுதியாகவுள்ள ரூபா 57,252 தொகை மீண்டும் சுற்றாடல் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் சம்பந்தமாக செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | இறுதி அறிக்கையில் அதனை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஏனைய நிறுவனங்களின் மூலம் காணிப் பயன்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதற்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல் மற்றும் அவற்றின் செயல்முன்னேற்றம் தொடர்பாக செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | | |
| (அ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.2.1 ஆம் பிரிவு | விலைமனுக்கள் கோரப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்படாது ஒரு சமூக அபிவிருத்திச் சங்கத்திற்கு நேரடியாக ஒப்படைக்கப்பட்ட தலைமை அலுவலக கட்டிடத்தை புத்துருவாக்குதல் மற்றும் திருத்தம் செய்தல் நடவடிக்கைகளுக்காக | தலைமை அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் பல சந்தர்ப்பங்களில் இடம்பெற்றுள்ளன. பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் பிரிவின் (35 ஆவது திருத்தம்) கீழ் | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மீளாய்வாண்டின் போது 1,446,380 செலுத்தப்பட்டிருந்தது. | விலை மனுக்கள் கோரப்படாது ரூபா 200,000 உச்ச அளவு வரை நேரடிப்பெறுகைகளின் மூலம் மேற்கொள்ள முடியுமானதுடன் திணைக்களம் எக் கட்டிடத்தினையும் திருத்தம் செய்வதற்காக ரூபா 200,000 யினை மிகைத்து செலவு செய்யவில்லை என்பதனை சுட்டிக்காட்டுகின்றேன். | |
| (ஆ) | நிதி மற்றும் ஊடக அமைச்சின் 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2(1) ஆம் பந்தி | பதிவு செய்தல் உரிமை இல்லாது பயன்படுத்திய வாகனத்தை பதிவு செய்தல் உரிமையுள்ள நிறுவனத்தின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தமது நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்து கொள்வதற்கு அல்லது பதிவு செய்தல் உரிமையுள்ள நிறுவனத்திற்கு முறையாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் பயன்படுத்துகின்ற ஏனைய நிறுவனங்களின் பெயரில் பதிவு செய்துள்ள 09 வாகனங்கள் சம்பந்தமாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வாகனங்களுக்கு மத்தியில் 252-4978 ஆம் இலக்க வாகனமானது செயலாளர் காணி அமைச்சின் பெயரிலும் PE 1685 ஆம் இலக்க மற்றும் JV 1497 ஆம் இலக்க வாகனமானது காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் பெயரிலும் காணப்பட்டன. அமைச்சுக்களைப் பிரிக்கும் போது அப்பகுதி வேறாக்கப்பட்டுள்ளதனா ல் அந்த வாகனத்தை எங்கள் திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய நிறுவனத் தலைவர் களுக்கு நிர்ணயிக்கப்பட்ட படிவத்துடன் வேண்டுதல் விடுக்கப்பட்டுள்ளது. கணக்கு தணிக்கையாளர் நாயகத்தினால் குத்தகை முறைமையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டுள் ள மிகுதியான 06 வாகனங்கள் காணி அமைச்சு செயலாளரின் | நிறுவனம் பயன்படுத்துகி ன்ற எனினும் ஏனைய நிறுவனங் களுக்கு உரிமை காணப்படுகின்ற சொத்துக்கள் சம்பந்தமாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | பெயரில் வழங்கப்பட்டுள்ளதுடன் குத்தகை முடிவடைந்து இலங்கை வங்கியினால் இந்த வாகனங்களின் உரிமை காணி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டதன் பின்னர் அந்த வாகனங்களை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) வருாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 03 செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 1,306,927 தொகையான நிதி ஏற்பாடுகளின் செயல் முன்னேற்றம் 61 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடைப்பட்டு இருந்த போதிலும் அச் செயற்திட்டங்களின் பௌதீக செயல் முன்னேற்றம் 25 சதவீதத்திற்கும் 45 சதவீதத்திற்கும் இடைப்பட்டதாக இருந்தன. | 2020 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தேசிய காணிப் பயன்பாட்டுக் கொள்கையை திருத்தம் செய்வது தொடர்பாக நிபுணத்துவ குழுவினை அழைப்பதற்கு மற்றும் தேசிய காணிப் பயன்பாட்டு மீளாய்வு செயற்திட்டத்தின் பௌதீக இலக்கின் பிரகாரம் பயிற்சி செயலமர்வினை மாவட்ட மட்டத்தில் நடாத்துவதற்கு முடியாதிருந்தது. காணி சாத்திய வளத்தின் பிரகாரம் விவசாய நிலத்தை வகைப்படுத்தும் முன்னோடிச் செயற்திட்டம் நீக்கிக் கொள்ளப்பட்டது. 2017/27 ஆம் இலக்க 2020 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் அமைச்சின் செயற்பரப்பினை வர்த்தமானியில் பிரசுரிக்கும் போது | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து செயற் திட்டங்களிலிருந்து பௌதீக செயல் முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இத்திணைக்களத்திற்கு முன்னணி செயற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டிருந்தும் அதற்காக மேலதிக நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்காததனால் வருடாந்தம் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கும் கொவிட் இன்னல் நிலைமையின் காரணாக வெளிக்கள செயற்பாடுகளை மேற்கொள்ளவும் முடியாதிருந்தது. | |
| (ஆ) | தேசிய காணிப் பயன்பாட்டு கொள்கையை திருத்தம் செய்வது திணைக்களத்தின் ஆரம்ப செயற்பாடாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் அதனை திருத்தம் செய்து முடிவுறுத்துவதற்கு முடியாதிருந்தது. | தேசிய காணிப் பயன்பாட்டுக் கொள்கையை திருத்தம் செய்தலை முன்னணிச் செயற்பாடாகக் கருதி திணைக்களத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டின் போது மேம்படுத்தப்பட்ட வரைபானது ஒரு நிபுணத்துவ குழுவின் மூலம் மேலும் அபிவிருத்தி செய்து இறுதி வரைபினைத் தயாரித்து அமைச்சரவை யின் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைப்பது இலக்கிடப்பட்டிருந்தும் 2020 ஆம் ஆண்டின் போது எதிர்பார்த்த இலக்கினை அடைந்து கொள்ள முடியாதிருந்ததுடன் அதனை 2021 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. | நிறுவனத்தின் தொடக்க செயற்பாடு களிலிருந்து எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| (அ) திணைக்களத்திற்குச் சொந்தமான மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 6,280,000 தொகையான கைதவிர்ப்புச் செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட 07 வாகனங்கள் மீளாய்வாண்டளவில் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் 2021 ஏப்ரல் மாதம் இறுதி வரை அந்த வாகனங்களின் உரிமை ஒப்படைக்கப்பட்டிருக்க வில்லை. இவற்றுக்கு மத்தியில் 2 வாகனங்கள் காணி அமைச்சின் பெயரிலும் 01 வாகனம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் (UNDP) பெயரிலும் பதிவு செய்யப்பட்டிருந்தன என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. | இந்த வாகனங்களுக்கு மத்தியில் திணைக்களத்தின் பெயரில் உள்ள 04 வாகனங்களில் 03 வாகனங்களை தற்பொழுது நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்கு தேவையான ஆவணங்களும் படிவங்களும் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. திணைக்களத்தின் பெயரில் உள்ள 61-3543 ஆம் இலக்க வாகனத்தின் உரிமையை ஒப்படைப்பதற்கு முன்வந்த போது அதன் வருமான உத்தரவுப் பத்திரம் தொடர்பாக உருவாகியுள்ள சிக்கலை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு நிவர்த்தி செய்த உடன் அதன் உரிமையையும் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். மிகுதியான 03 வாகனங்கள் காணி அமைச்சின்பெயரிலும் UNDP நிறுவனத்தின் பெயரிலும் உள்ள இரண்டு வாகனங்களை ஒப்படைப்பதற்கும் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குரிய வாகனத்தை பொறுப்பேற்பதற்கும் | கைதவிர்ப்புச் செய்வதற்கு ஒப்படைக்கப் பட்டுள்ள வாகனங்களின் உரிமையை ஒப்படைத்து அந்த நடவடிக்கையை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்குமாறு எழுத்து மூலம் தெரியப்படுத்தப்பட்டதுடன் இத்திணைக்களம் அதற்காக ஒருங்கிணைப்பு நடவடிக்கையை மாத்திரம் மேற்கொள்ளும் | |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1,600,000 தொகையான ஓடும் நிலையில் உள்ள 61-3364 ஆம் இலக்க வாகனத்தை ரூபா 870,507 செலவு செய்து திருத்தம் செய்வதற்கு சிபார்சு செய்யப்பட்டிருந்த போதிலும் அது பொருளாதார ரீதியாக விளைவற்றது என்பதனால் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எவ்வாறாயினும் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1,200,000 தொகையான 61-5126 ஆம் இலக்க வாகனம் ரூபா 931,938 மொத்த தொகை அதாவது அதற்கு மேற்பட்ட பணம் செலவு செய்து திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ஓடிய தூரத்தின் அளவு 5835 கிலோ மீட்டர்களாகும். இதற்கிணங்க அச்செலவு செய்தல் பொருளாதார ரீதியாக விளைவற்றது என்பது அவதானிக்கப்பட்டது. | 61-3364 ஆம் இலக்க வாகனத்தை கைதவிர்ப்புச் செய்வது சம்பந்தமாக 02/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் நியமிக்கப்பட்ட ஒரு குழுவினால் 02/2015 ஆம் இலக்க நிதி சுற்றறிக்கையின் 04 அ III தொகுதியின் கீழ் மேலே கூறப்பட்ட இலக்க வாகனத்தை கைதவிர்ப்புச் செய்தல் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. அந்த வாகனம் அரசாங்க நிதி சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கைதவிர்ப்புச் செய்யப்பட்டுள்ளது எனக் குறிப்பிடுகின்றேன். | நிறுவனத்தினால் சொத்துக்களை கைதவிர்ப்புச் செய்யும் போது சமனான கொள்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அலுவலகத்தின் தேவைப்பாட்டை கருத்தில் கொள்ளாது டோனர் கொள்வனவு செய்ததன் காரணமாக 2017 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டுள்ள 16 வகைகளைச் சேர்ந்த 131 | 2010 ஆம் ஆண்டிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட டோனர்கள் மற்றும் காட்ரிஜ்களின் மிகுதியானவைகள் களஞ்சியத்தில் காணக்கூடியதாக இருந்த போதிலும் அந்த மிகுதியானவைகள் 5 | தேவைப்பாடு தொடர்பாக கருத்தில் கொண்டு கொள்வனவுகளை மேற்கொள்வதற்கும் அவற்றினை விளைதிறனாக பயன்படுத்து வதற்கும் |

| | | |
|---|---|---|
| டோனர்கள் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பயன்படுத்தப்படாது காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | ஆண்டுகளை மிகைத்த அச்சு இயந்திரம் தொடர்பாக வருடாந்தம் (11 ஆண்டுகள்) மிகுதியாகவுள்ள அலகுகளாகும். இந்த டோனர்களையும் காட்ரிஜ்களையும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு ஒப்படைப்பதற்கு விசாரிக்கப்பட்டிருந்தும் தற்பொழுது அவற்றிற்குரிய அச்சு இயந்திரங்கள் பயன்படுத்துவதில்லை. 2020 ஆம் ஆண்டின் போது அழிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் முடியாமையினால் 2021 ஆம் ஆண்டின் போது அகற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் பயன்பாட்டிற்காக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனம் 2019 செப்தெம்பர் 03 ஆந் திகதி விபத்துக்குள்ளாகி ரூபா 23,250 நட்டம் ஏற்பட்டிருந்தது. நி.பி 104 அறிக்கையின் சிபார்சின் பிரகாரம் அது தொடர்பான தகவல்களை மறைத்தல் மற்றும் பொலிசில் முறைப்பாடு செய்யாமை ஆகிய காரணங்களின் அடிப்படையில் உதவிப் பணிப்பாளர் மற்றும் | இந்த வாகன விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் நியமிக்கப்பட்ட குழுவின் இறுதி விசாரணை அறிக்கையின் சிபார்சின் பிரகாரம் உரிய அறவீடு செய்தல் இடம்பெற்றது. அந்த வாகன விபத்து சாரதியின் கவனயீனம் அல்லது பிழை என்பதனை உறுதியாக இனங்காண முடியாது என்பது விசாரணைச் சபையின் அவதானிப்பு மற்றும் சிபார்சுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அச்சாரதி மற்றும் உதவிப் | விபத்து தொடர்பான தகவல்களை மறைத்தல் மற்றும் பொலிசில் முறைப்பாடு செய்யாமை சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சாரதியிடமிருந்து முறையே 02 சதவீதம் மற்றும் 05 சதவீதம் என்ற வகையில் ரூபா 1,628 நட்டம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. வாகனத்திற்காக மூன்றாந் தரப்பு காப்புறுதி மாத்திரம் இருந்ததன் காரணமாக உள்ளடக்க முடியாத மிகுதி நட்டமாகிய ரூபா 21,622 தொகையைப் பதிவழிப்பதற்கு பணிப்பாளர் நாயகத்தினால் 2021 சனவரி 18 ஆந் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் அப்பதிவழித்தலானது சச்சரவுத் தன்மையான ஒரு விடயமாக அவதானிக்கப்பட்டது. | பணிப்பாளரால் உரிய விபத்துக்களின் பின்னர் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் மாத்திரம் இந்த அறவீடு இடம்பெற்றுள்ளது. எவ்வாறாயினும், உரிய விபத்தின் போது வாகனத்தை ஓட்டுகையில் சாரதியினால் தவறு செய்யப்பட்டுள்ளது என்பது உறுதிப்படுத்தப்படாத சந்தர்ப்பத்தில் அந்த நட்டத்தை சாரதியிடமிருந்து அறவிடமுடியாது எனக் குறிப்பிடுகின்றேன். | |
| (ஆ) | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் 2014 யூலை 09 ஆந் திகதி திணைக்களத்தின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட கெப் வாகனத்திற்கு 2018 பெப்ரவரி 10 ஆந் திகதி தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தியிருக்கும் போது சாரதியின் கவனயீனத்தின் அடிப்படையில் இடம்பெற்ற ஒரு விபத்தின் காரணமாக ரூபா 3,831,172 நட்டம் ஏற்பட்டிருந்தது. அதில் ரூபா 3,569,318 தொகை காப்புறுதியினால் தீர்த்து வைக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி ரூபா 261,854 தொகையை சாரதியிடமிருந்து அறவீடு செய்வதற்கு நி.பி 104(4) படியான அறிக்கையின் மூலம் 2019 ஒக்தோபர் 31 ஆந் திகதி சிபார்சு செய்யப்பட்டிருந்தது. எனினும் அப்பணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2018 தேர்தல் கடமையின் போது இடம்பெற்ற விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் கீழான அறிக்கை LUPPD/1/11/1/1/ACC/PF 6063 ஆம் இலக்க 2019 திசெம்பர் 18 ஆந் திகதிய கடிதத்தின் ஊடாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் மூலம் அரசாங்க நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கும் அக்கடிதம் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் LUPPD/3/5/1 ஆம் இலக்க 2020 பெப்ரவரி 12 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அரசாங்க நிதித் திணைக்களத்திற்கும் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 2021 பெப்ரவரி 11 ஆந் திகதி முதலாவது ஞாபகப்படுத்தல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதிலும் அங்கீகாரம் | உரிய நட்டத்தை சாரதியிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கிடைக்காததனால் அங்கீகாரம் கிடைக்கும் வரை இந்த அறவீட்டினை மேற்கொள்ள முடியாதிருந்தது. | |
| (இ) | 2020 யூன் 03 ஆந் திகதிய WPNC-5787 ஆம் இலக்க வாகனம் விபத்துக்குள்ளாகி ரூபா 45,000 நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 28,000 மாத்திரம் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது. நி.பி 104(4) இன் படியான இறுதி விசாரணைக்காக 2020 யூலை 15 ஆந் திகதி ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த விசாரணையை மேற்கொண்டு நட்டத்திற்குரிய தரப்பினர்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். 2020 யூன் 03 ஆந் திகதி விபத்துக்கான இறுதி விசாரணைக் குழுவின் நடவடிக்கைகள் தற்பொழுது இடம்பெற்று வருகின்றது. திணைக்களத்தில் காணப்படுகின்ற பதவிநிலை உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக பல விசாரணைச் சபைகளுக்கு ஒரே உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தமை தற்பொழுது காணப்படுகின்ற COVID 19 நிலைமையினால் உத்தியோகத்தர்களையும் பொறுப்பான தரப்பினர்களையும் வரவழைப்பதின் சிக்கலின் அடிப்படையில் இவ்விசாரணைகளை நடாத்துவது தாமதமடைந்துள்ளது. நாட்டில் காணப்படும் நிலைமையானது வழக்கத்திற்கு வந்ததன் பின்னர் விரைவாக இந்த விசாரணை முடிவுறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | தாமதமின்றி விசாரணைகளைப் பூர்த்தி செய்து நட்டத்திற்குப் பொறுப்பானவர் களை இனங்காண்தல் வேண்டும். |
| (ஈ) | 61-2377 ஆம் இலக்க வாகனம் 2020 மார்ச் 05 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியுள்ள துடன் அது சம்பந்தமாக நி.பி 104 இன் பிரகாரம் தொடக்க விசாரணைகளை | 61-2377 வாகனத்திற்கு இடம்பெற்ற விபத்து தொடர்பாக தொடக்க விசாரணைகளை மேற்கொள்ளுமாறு தெரியப்படுத்தியிருந்தும் 2020 மார்ச் மாதத்தின் | நி.பி 104 இன் பிரகாரம் விசாரணைகளை மேற்கொண்டு நட்டத்தை இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் |

| | | |
|---|---|---|
| மேற்கொண்டு நட்டத்தை இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | பின்னர் ஏற்பட்ட COVID 19 நிலைமையின் காரணமாக நிர்ணயிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் தொடக்க விசாரணைகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. தொடக்க விசாரணைகளை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட காலம் மிகைத்திருந்ததனால் நிதிப்பிரமாணம் 104(4) இன் கீழான நட்டம் தொடர்பாக இறுதி விசாரணைக் குழு நியமிக்கப்பட்டு அதற்கிணங்க மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 250,000 இற்கு மதிப்பீடு செய்து துண்டு துண்டாக விற்பதற்கு சிபார்சு செய்யப்பட்ட 61-3660 ஆம் இலக்க ஜீப் வண்டிக்கு தனிப்பட்ட ஒரு கொள்வனவு தாரரினால் ரூபா 2,238,000 விலை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த விலை மனு பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் இந்த வாகனம் ஓடுவதற்கு ஈடுபடுத்த முடியாத வாகனம் எனக் கருதி கைதவிர்ப்பு நடவடிக்கை கைவிடப்பட்டிருந்தது. மீண்டும் 2019 யூலை 24 ஆந் திகதி ரூபா 730,000 பெறுமதிக்கு மதிப்பீடு செய்யப்பட்ட அந்த ஜீப் வண்டியின் பதிவினை இரத்துச் செய்து உடைந்த பொருளாக 2020 சனவரி 31 ஆந் திகதி நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டில் பாவனையிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட வாகனங்களை ஏலமிடுவதற்காக வாகனங்களை சமர்ப்பிக்கும் போது தவறுதலாக 61-3660 ஆம் இலக்க வாகனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த வாகனம் ரூபா 250,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டு துண்டு துண்டாக்கி விற்பதற்கு மோட்டார் வாகன பரிசோதகர் உள்ளடங்கிய தொழில்நுட்பக் குழு சிபார்சு செய்திருந்தது. எனினும், தவறுதலாக அந்த நிலைமையை ஏலமிடும் போது குறிப்பிடுவதற்கு முடியாமையின் காரணமாக இந்த வாகனத்திற்காக | நிறுவனத்தின் சொத்துக்களை கைதவிர்ப்பு நடைமுறைக்காக சிபார்சு செய்யும் போது அச்சொத்துக்கள் தொடர்பாக கவனம் செலுத்தி சரியான முறைமையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | உயர்ந்த விலை கிடைத்திருந்தது. எனினும் கொள்வனவு செய்யும் கொள்வனவுதாரருக்கு வீதியில் அது ஓடமுடியாத வாகனம் என்பதனால் கொள்வனவு செய்வதால் ஏற்படும் சிக்கலைத் தவிர்ப்பதற்காக இது ஏலமிடும் நடவடிக்கையிலிருந்து நீக்கப்பட்டது. | |

## 4. நல்லாட்சி

### 4.1 பொதுமக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| பொதுமக்களுக்கு நிறுவனம் சம்பந்தமாக சரியான மற்றும் காலத்திற்குப் பொருத்தமான தரவுகளை பெற்றுக் கொள்வதற்காக திணைக்களத்தின் இணையத்தளம் நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் இணைய தளத்தை நாளதுவரையாகப் பேணுவது தொடர்பாக திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களின் கூட்டத்தின் போது பல சந்தர்ப்பங்களில் கலந்துரையாடி எதிர்காலத்தில் அதனை அபிவிருத்தி செய்ய வேண்டிய முறைமை தொடர்பாக விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு ஆலோசனை மற்றும் வழிகாட்டல் வழங்கப்பட்டிருந்தது. விசேடமாக இணையத் தளத்தை நாளதுவரையாக்குவதற்குத் தேவையான கருத்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கும் அதன் மூலம் நாளதுவரையாக்கப்பட வேண்டிய தகவல்களை ஒழுங்குபடுத்துவதற்கு | தீர்மானம் எடுப்பதற்காக இத் தகவல்கள் தொடர்பு கொள்ளும் நிறுவனங்களும் பொதுமக்களும் சரியாகவும் காலத்திற்குப் பொருத்தமாகவும் தகவல்களை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் திணைக்களத்தின் இணையத்தளத்தை நாளதுவரையாகப் பேணுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பதவிநிலை உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்ததுடன் அக்குழுவின் மூலம் உரிய நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. | |

**5. மனிதவள முகாமைத்துவம்**

**5.1 இணைத்துக்கொள்ளப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| திணைக்களத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 697 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான ஊழியர்களின் எண்ணிக்கை 633 ஆக இருந்ததனால் சிரேஷ்ட மட்டத்தில் 13 ஊழியர்கள், மூன்றாம் மட்டத்தில் 01 ஊழியர், இரண்டாம் மட்டத்தில் 34 ஊழியர்கள் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 16 ஊழியர்களுடன் 64 வெற்றிடங்கள் காணப்பட்டதன் காரணமாக முகாமைத்துவ தீர்மானங்கள் எடுக்கும் போதும் நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் போதும் ஆக்கபூர்வமாக நடவடிக்கை எடுப்பதற்கு அது தடையாக இருந்தது. | இணங்குகின்றேன். இத்திணைக்களத்தின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க சேவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் வேண்டுதல் விடுக்கப்பட்டிருந்தது. உதவிப் பணிப்பாளர் (மாவட்ட காணிப் பயன்பாடு) பதவிக்காகச் சேர்த்துக் கொள்வதற்கு 2017 யூன் 13 ஆந் திகதிய கடிதத்தினால் செய்யப்பட்ட வேண்டுதலின் பிரகாரம் 2020 நவம்பர் 09 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்து பரீட்சைகள் திணைக்களம் மட்டுப் படுத்தப்பட்ட பரீட்சையினை ஆகஸ்ட் மாதத்தின் போது நடாத்துவதற்கு எதிர்பார்க்கப் பட்டது. திணைக்கள மாக்கப்பட்ட நிறைவேற்றுனர் சேவை தரத்திற்கான ஆட்சேர்ப்பு நடைமுறை களைத் திருத்துவதற் காகவும் உதவிப் பணிப்பாளர் (விவசாயப் பொருளியல்) பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தல் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. காணிப் பயன்பாட்டு | நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்று வதற்காக ஆக்கபூர்வமாக நடவடிக்கை எடுப்பதற்கு முடியுமான வகையில் காணப்படுகின்ற மனித வளங்களை முகாமைத்துவம் செய்வதற்கும் அதேபோல வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

திட்டமிடல் உத்தியோகத்தர் களை அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக உள்ளீர்ப்புச் செய்வது தொடர்பான ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் திருத்தம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது. மூன்றாம் மட்டத்திற்குரிய வெற்றிடங்களை நிரப்புமாறும் இரண்டாம் மட்டத்திலுள்ள பதவிகளுக்கு மத்தியில் காணிப் பயன்பாட்டு திட்டமிடல் உத்தியோகத்தர் பதவிக்காக 1/2012 ஆம் இலக்க அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்சேர்க்க முடியாததனால் அவ்வெற்றிடங்களை அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மூலம் நிரப்புவதற்காகவும் இரண்டாம் மட்டத்தின் ஏனைய வெற்றிடங்களை நிரப்புவதற்காக அரசாங்க சேவைகள் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் வேண்டுதல் விடுக்கப்பட்டது. ஆரம்ப சேவை தரத்தின் தொழில்நுட்ப உதவியாளர் பதவியில் 07 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் அதனை எதிர்காலத்தில் தேவையற்ற ஒரு பதவியாக இனங்கண்டு தற்போதுள்ள உத்தியோகத்தர்கள் வகிப்பதற்கு தனிப்பட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் ஆரம்ப தரத்திலுள்ள ஏனைய பதவிகளுக்கு உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்ளல் 01/2020 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கைவிடப்பட்டுள்ளது.